மக்கள் நீதி மய்யம்

PR/040121/04/T

04 ஜனவரி 2021
சென்னை

<u>பத்திரிக்கை செய்தி</u>

**மக்கள் நீதி மய்யம்**

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த முக்கிய வாக்குறுதிகள்**

1. **சுழற்சி பொருளாதாரத்தை நிறுவுதல்:**

மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு விதிகளை வகுப்பதன் மூலம் நீர், நெகிழி மற்றும் மின் கழிவு போன்ற பொருட்களுக்கு ஒரு சுழற்சி பொருளாதாரத்தை நிறுவுதல். குடிசைத் தொழில்கள் மற்றும் சுய உதவிக்குழுக்களால் நெகிழி இல்லாத மாற்று உற்பத்திகளை ஊக்குவித்தல்.

2. **மாசுபாட்டின் தரங்களை கண்காணித்தல் மற்றும் செயல்படுத்துதல்:**

2017-ஆம் ஆண்டின் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் படி அனைத்து மாசு கண்காணிப்புத் தரவுகளும் தொடர்ச்சியாக "OCEMS–(ஆன்லைன் தொடர்ச்சியான உமிழ்வு மற்றும் கண்காணிப்பு அமைப்புகள்) மூலமாக தொடர் பதிவேற்றம் செய்யப்பட்டு கண்காணிக்கப்படும்.

3. **கடுமையான நிலத்தடி நீர் கட்டுப்பாடு:**

விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினர் நலனுக்காக விரிவான மற்றும் கடுமையான நிலத்தடி நீர் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு பெரிய அளவிலான நிலத்தடி நீர் உற்பத்திக்கு வழிவகுக்கப்படும். ஏரிகள், கண்மாய்கள், நீர் நிலைகள், நீர்வழிகள் மற்றும் சதுப்புநில பாதுகாப்பை உறுதி செய்ய விதிகள் திருத்தி அமைக்கப்படும்.

புதிய எண் 4, பழைய எண் 172, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை - 600018.
044 2435 8718
/maiamofficial
www.maiam.com

மக்கள் நீதி மய்யம்

4. **மாநிலம் தழுவிய சுற்றுச்சூழல் நிலப்படம் உருவாக்கப்படும்:**

மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் தொழில்துறை தளங்களுக்கென தனி அளவுகோல்கள் வடிவமைக்கப்படும்.

5. **நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் முன்னேற்றம்:**

சுற்றுச்சூழலுக்கு இணக்கமான மற்றும் பசுமைத் தொழில்களை செயல்படுத்த வெகுவாக ஊக்குவிப்போம்.

6. **உள்ளூர் மக்களின் பங்கேற்பை உறுதி செய்தல்:**

உள்ளூர் மக்கள் அடங்கிய சுற்றுச்சூழல் குழுக்கள் துவங்கப்பட்டு, TNPCB மற்றும் மாவட்டம் நிர்வாக உதவியுடன், பெருமளவு மாசுபடுத்தும் இடங்கள் கண்டறியப்பட்டு தொழில்துறை மாசுக்கள் கட்டுப்படுத்தப்படும்.

7. **உயிர்ச்சூழல் அமைப்புகள் பாதுகாப்பு:**

தொழிச்சாலைகள் மற்றும் பொதுமக்கள் இடையே உயிர்ச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றிய விழிப்புணர்வு உண்டாக்கப்பட்டு சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பாதுகாக்கப்படும்.

**நாளை நமதே!**

**நன்றி**
**ஊடகப்பிரிவு**
**மக்கள் நீதி மய்யம்.**

புதிய எண் 4, பழைய எண் 172, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை - 600018.
044 2435 8718
/maiamofficial
www.maiam.com